Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com
Websites
Bahasa: www.pengguna.org.my
English: www.consumer.org.my
Chinese: www.cap.org.my

பத்திரிகை செய்தி 18-05-2020

# ஓராண்டு சிறப்பு நினைவுக் கட்டுரை - எஸ். எம். முகம்மது இத்ரிஸ் மறைந்தும் - மறக்கப்படாதவர்

ஒரு சாதாரண விவசாய குடும்பத்தில் தமிழ்நாட்டின் இராமநாதபுரத்தில் பிறந்து, 1947ல் மலேசியாவிற்கு குடிபுகுந்தார் அந்த சேவையாளர். தனது ஆரம்ப கல்வியை தமிழ் பள்ளியின் பயின்று, பிறகு பல்கலைகழகம் சென்று தனது தந்தையாரின் வியாபாரத்திற்காக மலேசியா வந்து சேர்ந்தார் எஸ்.எம். முகம்மது இத்ரிஸ்.

மே மாதம் 17ம் தேதி அவர் மறைந்து ஓராண்டு நிறைவு பெறுகிறது. ஆனால் அவர் வளர்த்துவிட்ட பினாங்கு பயனீட்டாளர் சங்கமும், மலேசிய பூவுலகின் நண்பர்கள் இயக்கமும், அவரின் கொள்கைகளுக்கேற்ப இன்றும் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

திரு எஸ்.எம். முகம்மது இத்ரிஸ் ஒரு இயற்கையின் சக்தியாக திகழ்ந்து வந்தார். மலேசியாவில் அவரின் பெயரை உச்சரிக்காதவர்கள் யாருமே இருந்தது கிடையாது. அவரைப் போன்ற ஒரு சகாப்தம் மீண்டும் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

எல்லாவிதமான சிக்கல்களைப் பற்றிய தகவல்களைச் சில நிமிடங்களில் தொகுத்து தருவதற்கு அவருக்கு திறமை இருந்தது. தனது 94 வயதிலும் பல நாட்டு செய்தி இதழ்கள், சஞ்சிகைகள், தினசர, வார மற்றும் மாத இதழ்களைப் படித்து அதிலுள்ள தகவல்களைத் தனக்கும் மற்றவர்களுக்கும் தந்து உதவுகிற ஒரு மனப்பான்மையை அவரிடமிருந்துதான் நாம் கற்றுக்கொள்ள முடியும்.

மற்றவர்களுக்கு அனுப்பவதோடு மட்டுமல்லாது அதனைப் படித்து என்ன நடவடிக்கையைப் படித்தவர் எடுக்கப்போகிறார் என்பதையும் கண்டறிவார்.

ஒரு தகவலை, அலசி-ஆராய்ந்து, செயல் வடிவமாக்க முடியும் என்பதையும், அது குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்க முடியும் மற்றும் தேவை ஏற்பட்டால் கொள்கைகளாகவும் மாற்ற முடியும் என்பதை செயல்படுத்தி காட்டுபவர் அவர். சமுதாய பிரச்னைகளை அவர் கையாளுகின்ற முறை அவருடைய புத்திசாலித்தனத்தையும், அறிவையும் எந்த அளவுக்கு விரிவாக இருக்கிறது என்பதை பறைசாற்றும். சமூக - பயனீட்டாளர் சார்ந்த விஷயங்களை பல மொழிகளில் மொழியாக்கம் செய்ய வைக்கப்பட்டு அவ்விஷயங்களை அவர் கையாளுகின்ற விதமும், நிபுணத்துவமும் அவரது இளவயதிலிருந்தே அவரோடு இருக்கும் சிறப்பாகும்.

தனது 94 வருட வாழ்க்கையின் கடைசி நாள் வரை பணியாற்றி வந்துள்ளார்.

உள்ளூர், தேசிய மற்றும் உலக அளவில் உள்ள கோளாறுகளைச் சரிசெய்ய அவர் உந்தப்பட்டார். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் எவ்வளவுதான் சற்று பொறுமையாக இருங்கள் என எவ்வளவு எடுத்து கூறினாலும் தனது முதிர்ந்த வயதிலும், உடல் தளர்ந்து விட்ட நிலையிலும் சோர்வு, நோய் போன்றவற்றை உதறிதள்ளிவிட்டு தொடர்ந்து தமது சமூக போராட்டத்தைத் தனது உயிர் பிரியும் வரை தொடர்ந்தார்.

மலையாக குவியும் உணவு விரயம், குழந்தைகளும் சிசுக்களும் பசியோடு வாழ்வது, வறுமையில் வாழ்பவர்கள் கடன் சுமையில் தத்தளிப்பதைப் பார்க்கும் போது அவருடைய மனம் உறங்க மறுக்கும்.

நகரத்தில், மலையில், காடுகளில் மரங்கள் வெட்டப்பட்டால் இத்ரிஸ் பொங்கி எழுவார். பாதுகாப்பற்ற உணவு, தொழில் ஆபத்துக்கள், சாலை விபத்துக்கள், மது, புகையிலையால் ஏற்படும் மரணங்கள், மாசுப்பட்ட காற்று, குறைந்து வரும் மீன் வளம் ஆகியவற்றை செவிமெடுக்கும் போது இத்ரிஸ் கண் கலங்குவார்.

இத்ரிஸின் எதிர்பார்ப்பு, இவை அனைத்தையும் தடுக்க முடியும். தங்கள் உரிமைகளுக்காக முன் வந்து நிற்க வேண்டும் என்பதே.

அவர் 50 ஆண்டுகளாக வழிநடத்திய பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தில் "புகார்" துறை மிக சிறப்பாக செயல்பட்டு வந்த ஒரு பகுதியாகும்.

நீங்கள் ஏமாற்றப்பட்டால், மருத்துவ சேவையில் நீங்கள் ஏமாறி இருந்தால், நீங்கள் வாங்கிய வீட்டின் சுவரில் விரிசல்கள் இருந்தால், உங்கள் பணியிடத்தில் பிரச்னை இருந்தால், அங்கே உங்கள் ஆரோக்கியத்திற்கு கெடுதல் இருந்தால், தோட்டத் தொழிலாளர்களின் உடல்நலத்தில் கேடு ஏற்பட்டால், உங்கள் அருகில் உள்ள காடுகள், மரங்கள் வெட்டப்பட்டால், பொது போக்குவரத்து ஒழுங்காக செயல்படவில்லை என்றால், அதைக் கண்டு முனுமுனுக்காமல் அதிகாரப்பூர்வமாக புகார் தெரிவிக்க வேண்டும் என பயனீட்டாளர்களுக்காக முழக்கம் இட்டார்.

திரு இத்ரிஸ், பயனீட்டாளர் சங்கங்களின் நோக்கத்தை மாற்ற உதவினார். பயனீட்டாளர் சங்கங்கள் என்றால், பொருள் வாங்குவது, உண்பது, ஏமாற்றப்படும் போது கவனிப்பது என்ற சிந்தனையை மாற்றி அதற்கு அதன் நடவடிக்கைகளை மேலும் விரிவிக்கி புதுவடிவம் கொடுத்தார்.

எந்த பிரண்ட் கேமிரா, எந்த வகை கார், என்ன பிராண்ட் சட்டை, என்ன அழகு சாதனம் வாங்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தாமல், அதற்குப் பதிலாக பயனீட்டாளர்களின் முக்கிய பிரச்னைகளான உணவு, சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறதா என்பதை தொட்டு நாம் சிந்திக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

பி.ப.சங்கத்தை இவ்வாறு வழிநடத்தியதான் காரணமாக, உலக முழுவதும் உள்ள பயனீட்டாளர் அமைப்புக்கள் தங்கள் நோக்கத்தை மாற்றி, பி.ப.சங்கத்தின் கொள்கையில் செயல்பட தொடங்கின.

இதனால் பல நாட்டு அரசாங்கங்களின் கோபத்திற்கும் தள்ளப்படநேர்ந்தது. அரசாங்கத்தை விமர்சிக்கும் போது அவர்களுக்க் கோபம் வரத்தானே செய்யும், ஆனால் இத்ரிஸ் இதற்கெல்லாம் அஞ்சவில்லை.

திரு இத்ரிஸ் பி.ப.சங்கத்தின் மூலம் நூற்றுக்கணக்கான கருத்தரங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த கருத்தரங்குகள் அரசாங்கத்திற்கு பேருதவியாக இருந்தன.

இதில் மிகப் பெரிய சாதனை, சுற்றுச்சூழல் தொடர்பான ஒரு ஆய்வு கருத்தரங்கு நான்கு நாட்களுக்கு பினாங்கில் நடைபெற்றது. 197ல் மலேசிய சுற்றுச்சூழல் ஒரு நெருக்கடி என்பதுததான் அதன் தலைப்பு.

1982ல் புதிய சுற்றுச்சூழல் அமைச்சர் டத்தோ அமர் ஸ்டீபன் யோங், பி.ப.சங்கத்திற்கு வருகை மேற்கொண்டு, இந்தச் சுற்றுச்சூழல் அமைச்சு உருவாவதற்கு காரணமே பி.ப.சங்கம் என்றும் அதற்கு அந்த கருத்தரங்குதான் மூலக் காரணம் என்றும் இத்ரிஸ் அவர்களுக்கு பாராட்டு வழங்கினார்.

பி.பசங்கம் எல்லா சமூகத்துக்கும் பணி செய்கின்ற ஒரு தொண்டூழிய அமைப்பாக இருந்தாலும், மலேசிய, இந்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளில் அவர் அக்கறை சற்று அதிகமாகவே இருந்தது. தமிழ் பகுதி ஒன்றை பி.பசங்கத்தில் தொடங்கி, மலேசியாவிலுள்ள இந்தியர்கள் குறிப்பாக தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை கையாண்டு வந்தார்.

இந்தியர்கள் அதிகம் வாழும் இடங்கள் கண்டறியப்பட்டன. அங்கே அவர்கள் எதிர்நோக்கும் பொருளாதார, சமூக பிரச்னைகள் என்னவென்று ஆய்வு நடத்தப்பட்டது.

குறிப்பாக தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கி வந்த பிரச்னைகள் மீது அதிக கவனம் செலுத்தினர். இரப்பர் மற்றும் செம்பனை தோட்ட தொழிலாளர்களின் சம்பளம், வீட்டு வசதி, ஆயாக்கொட்டகை தொழிலாளர்கள் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி, தண்ணீர் பிரச்னை, முதலாளிமார்கள் கொடுக்கும் பாலியல் தொந்தரவுகள், தோட்டங்களில் விற்கப்படும் பொருட்களின் தரம், சம்சு பிரச்னை மருத்துவ பிரச்னை என எண்ணற்ற பிரச்னைகளை மிக தைரியமாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றார் இத்ரிஸ்.

நகர்புறத்தில் உள்ள இந்தியர்கள் எதிர்நோக்கும் வீட்டு பிரச்னை, வேலை பிரச்னை, சமூக பிரச்னை, இளைஞர்களிடயே உள்ள வன்முறை, சினிமா, மது போன்றவற்றை தொட்டு பேசிய பி.ப.சங்கம் இந்தியர்களிடையே அதிகரித்து வந்த கடன், அதிக செலவு பிரச்னைகளையும் கையாண்டது.

விவசாயத்துறையில் மலேசிய இந்தியர்கள் இயற்கை விவசாயத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டின் மிக புகழ்மிக்க இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்களைச் சந்தித்து, மலேசிவிற்கு அழைத்து வந்து, கேமரன் மலை இந்திய விவசாயிகளுடன் பயிற்சிக்கு பாதை போட்டவர் இத்ரிஸ். அதன் பிறகு தமிழ்நாட்டின் பல இயற்கை விவசாய துறை அறிஞர்களை அழைத்து, மலேசிய விவசாயத்துறையில் இயற்கைக்கு அச்சாரம் போட்டவர் இத்ரிஸ்.

இந்தியர்களின் அதிகம் செலவு செய்யும் பழக்கத்தை கண்டறிந்து அவற்றை குறைப்பதற்கு பல முயற்சிகளை அவர் கையாண்டார்.

பலதரப்பட்ட விருந்துகளை குறைக்க வேண்டும், மாலைகள் போடுவதை தவிர்க்க வேண்டும், (தனது வாழ்நாளில் என்றுமே மாலை வாங்கியது கிடையாது) வீட்டில் சமைத்து சாப்பிட வேண்டும், அதுவும் பாரம்பரிய உணவுகளுக்கு நாம் திரும்ப வேண்டும் என பிரச்சாரம் செய்தார். நாட்டு காய்கறிகள் மீது அவருக்கு விருப்பம் அதிகம்.

நம் இந்திய மக்கள் சிந்திக்கும் ஒரு சமுதாயமாக மாற வேண்டும் என்பதே இத்ரிஸின் விருப்பம்.

என்றும் வெள்ளை ஜிப்பா, வெள்ளை வேஷ்டி அணியும் இத்ரிஸ் வெள்ளை மனம் படைத்தவர்.

ஓய்வாக இருக்கும் போது பாரதியாரின் பாடல்களைத் தவறாமல் செவிமெடுப்பார். என்.எஸ். கிருஷ்ணன், எம்.எஸ். சுப்புலெட்சுமி ஆகியோரின் பாடல்களையும் தவறாது கேட்பார்.

நமது மக்கள் அதிகம் படிக்க வேண்டும் என யாரை சந்தித்தாலும் அறிவுரை கூறுவார். கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி, போன்றவை ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும், அதனை ஓத வேண்டும் என்று அடிக்கடி வேண்டுகோள் விடுப்பார்.

தமிழ்நாட்டு வார மாத இதழ்களை ரசித்துப்படிப்பார். தமிழ் இதழ்களில் பசுமை விகடன் அவர் விரும்பிப் படிக்கும் வார இதழாகும்.

அதில் உள்ள கட்டுரைகளை அரசாங்கம் மற்றும் தனிப்பட்டபவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி தமிழ் பகுதியை கேட்டுக்கொள்வார். பசுமை விகடன் ஆசிரியர், பொன். செந்தில் குமார் அவர்களுடன் அடிக்கடி தொடர்புக்கொண்டு, இயற்கை விவசாயம் தொடர்பான கட்டுரைகளை இன்னும் அதிகமாக வெளியிடும்படிக் கேட்டுக்கொள்வார்.

மலேசியா உருவாக்கிய பல சிறந்தவர்களில் திரு இத்ரிஸ் அவர்களும் ஒருவர். மற்றவர்களுக்கு ஒரு சிறந்த நல்வழியை உருவாக்கிய அந்த சமூக போராட்டவாதியை ஓராண்டிற்கு பிறகு நினைத்துப் பார்க்கின்றோம். மறைந்தும் மறக்க முடியாதவர் இத்ரிஸ் ஐயா.